[1984 பிப்ரவரி 23

(ஆ) விதி 30 (3)ன் கீழ் அலுவல் வரிசை மாற்றம்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''பேரவையின் விதி 30 உள் விதி (3)-ன் கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 4. அரசினர் தனித் தீர்மானம் மீதான விவாதத்தை ஒத்தி வைத்து, மற்றவற்றைத் தொடர்ந்து வரிசைப் படி எடுத்துக் கொள்ளலாம்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தொலைக் காட்சியில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்ட முன் வடிவு 1984—தொடர்ச்சி.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நேற்று நான் இந்தச் சட்டத்தின் மீது பேசியதைத் தொடர்ந்து இன்று சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தின் மூலம் வீடியோக் கள் மூலம் திரைப்படம் காட்டுவதற்கும், அப்படி திரைப்படம் காட்டுகின்றபோது, பொது இடங்களில் அவைகள் காட்டப்படு மானால், அரசாங்கத்தினுடைய லைசென்ஸ் பெற வேண்டும். அதைப் போலவே வீடியோ லைப்ரரி வைத்திருப்பதற்கும், அர சாங்கத்தினுடைய லைசென்ஸ் வைத்திருக்க வேண்டும். அரசாங்கத்தினுடைய தணிக்கை செய்யப்பட்ட படங்கள் தான் காட்டப்பட வேண்டும். அது மட்டுமல்லாமல், வீடியோவிலே படம் பார்ப்பதாக இருந்தாலும், பொது இடங்களில் பார்ப்பதாக இருந்தாலும், வீடியோ லைப்ரரி வைப்பதாக இருந்தாலும், அவர் கள் எல்லாம், படத்தை எடுத்த சொந்தக்காரர்கள் இடத்திலே யிருந்து, காப்பி ரைட் சம்பந்தமாக, கன்சன்ட் லெட்டர், சம்மதக் கடிதம் வைத்திருக்க வேண்டும். அப்படி இந்த ஷரத்துக்களை மீறினால், ஒரு வருடம் ஜெயில், அல்லது ஆயிரம் ரூபாய் அப ராதம், அதைப் போலவே தணிக்கை செய்யப்பட்ட படம் காட் டாமல் வேறு படத்தைப் போட்டாலும், 3 மாதம் ஜெயில், ஆயிரம் ரூபாய் அபராதம். போலீஸ் அதிகாரிகள் இந்த மாதிரி, வீடுகளிலே நாம் திரைப்படங்கள் பார்த்துக் கொண்டு இருந்தா லும், பொது இடங்களில் பார்த்துக் கொண்டிருந்தாலும், அல்லது வீடியோ லைப்ரரி வைத்திருந்தாலும், லைசென்ஸ் இல்லாமல் நடத்திக் கொண்டிருக்கிறார்கள், அந்த இடங்களில், சென்சார் செய்யப்படாத படங்கள் காட்டப்படுகின்றன என்ற தகவல் வந்தால் போதும், போலீஸ் அதிகாரிகள் அதை நம்புவதற்குக்